# சின்னச் சின்னதாய்...



உடுமலை கோட்டாட்சியர் ஜஸ்வந்த் கண்ணனிடம், வயநாடு வெள்ள நிவாரண நிதிக்கான காசோலையை வழங்கிய சின்னவீரம்பட்டி அரசு பள்ளி மாணவிகள்.

## வயநாடு வெள்ள நிவாரண நிதியாக ரூ.8,700 வழங்கிய பள்ளி மாணவிகள்

● உடுமலை

உடுமலை அடுத்துள்ள சின்னவீரம்பட்டி அரசு நடுநிலைப் பள்ளியில் 600-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 6-ம் வகுப்பு பயிலும் மாணவிகள் சவுர்ணிகா, தவுபிகா ஆகியோர் தங்களது உண்டியல் சேமிப்புத் தொகை மற்றும் சக மாணவர்கள் விருப்பத்துடன் அளித்த தொகையையும் சேர்த்து ரூ.8,700-ஐ கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அனுப்ப முடிவு செய்தனர். பள்ளி தலைமையாசிரியர் இன்பக்கனி, பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர் சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலையில், உடுமலை கோட்டாட்சியர் ஜஸ்வந்த் கண்ணனிடம் அதற்கான காசோலையை நேற்று மாணவிகள் வழங்கினர். மாணவிகளின் இச்செயலை பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் வெகுவாக பாராட்டினர்.

## சத்தியமங்கலம் மலர் சந்தையில் கனகாம்பரம் கிலோ ரூ.2600-க்கு விற்பனை

● ஈரோடு

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் சுற்றுவட்டாரப் பகுதிகளில், 2000 ஏக்கர் பரப்பளவில் மல்லிகை, முல்லை, கனகாம்பரம், காக்கடா, ஜாதிமல்லி, சம்பங்கி, செண்டு மல்லி உள்ளிட்ட மலர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இங்கு பறிக்கப்படும் பூக்கள், சத்தியமங்கலத்தில் செயல்படும் மலர் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஆடி மாத பிறப்பை ஒட்டி, சத்தியமங்கலம் மலர் சந்தையில், பூக்களின் விலை அதிகரித்து காணப்பட்டது. இன்று சுதந்திரதினம் கொண்டாடப்படும் நிலையில், சத்தி மலர் சந்தையில் நேற்று கனகாம்பரம் கிலோ ரூ.2600-க்கும், மல்லிகை ரூ.1600-க்கும் விற்பனையானது.

சத்தியமங்கலம் மலர் சந்தையில் நேற்று பூக்களின் விலை விவரம் (கிலோவில்) வருமாறு:

காக்கடா மற்றும் ஜாதி முல்லை தலா ரூ.1000, முல்லை ரூ.935, அரளி ரூ.300, சம்பங்கி ரூ.240, செவ்வந்தி ரூ.200.

# கல் குவாரியில் தொடரும் உயிரிழப்புகள்

## ● கண்டுகொள்ளப்படாத விதிமுறைகள்

எஸ்.கோபு

● பொள்ளாச்சி

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு அருகே வீரப்பகவுண்டனூரில், கோவை நரசீபுரம் பகுதியை சேர்ந்த ரவிக்குமார் என்பவருக்கு சொந்தமான கல்குவாரி உள்ளது. இந்த கல்குவாரியில் வீரப்ப கவுண்டனூரை சேர்ந்த கிளி என்கிற துரை (50) என்பவர் 75 அடி ஆழத்தில் டிரில்லிங் பணி செய்து வந்தார். அவருடன் மேலும் 3 பேர் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது பாறையின் மேல் பகுதியில் நந்தகுமார் என்பவர் பொக்லைன் இயந்திரம் மூலம் கற்களை லாரியில் ஏற்றி கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாக பாறை மேலிருந்து கல் தவறி குவாரிக்குள் வேலை செய்து கொண்டிருந்த துரையின் தலையில் விழுந்தது. அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக கொழிஞ்சாம்பாறையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு துரையின் உடலை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கெனவே அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுதொடர்பாக, கல்குவாரி உரிமையாளர் ரவிக்குமார், பொக்லைன் இயந்திர ஓட்டுநர் தங்கராஜ், குவாரி மேலாளர் நந்தகுமார், மேற்பார்வையாளர் திலக் ஆகியோர் மீது கிணத்துக்கடவு போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

தமிழ்நாடு சுரங்க சான்றிதழ் பெற்ற தொழிலாளர் நல சங்கத்தினர் மாநில பொதுச்செயலாளர் சண்முகம் 'இந்துதமிழ் திசை' செய்தியாளரிடம் கூறியதாவது:

கோவை மாவட்டத்தில் பெரும்பாலான குவாரிகளில் சுரங்க விதிமுறைகளை பின்பற்றாமல் கனிம வளங்கள் வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் நலன் குறித்த கனிம வளத்துறையின் விதிமுறைகளை முறையாக பின்பற்றுவதில்லை. கல்குவாரியில் பணியாற்றும் மனித உயிர்களை அவர்கள் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. கனிம வளச் சட்டப்படி குவாரியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தலைக்கவசம், ஷூ உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்க வேண்டும். ஆனால் யாரும் அதனை முறையாக கடைபிடிப்பதில்லை. அதேபோல் குவாரியின் உள்அமைப்பு படிக்கட்டுகள் போல அடுக்கடுக்காக இருக்க வேண்டும். பெரும்பாலான குவாரிகளை கிணறு போன்று வட்ட அமைப்பில் வெட்டுகின்றனர். இதனால் மேலே இயந்திரங்களை பயன்படுத்தி வேலை செய்யும் போது பாறை கற்கள் சரிந்து விழும்போது, குவாரியின் உள்ளே வேலை செய்பவர்கள் உயிருக்கு ஆபத்தாக முடிகிறது.

கடந்த ஆண்டு டி.நல்லிக்கவுண்டன் பாளையம் குவாரியில் இதே போன்று நடந்த விபத்தில் உயிரிழந்தவர் குடும்பத்துக்கு இதுவரை இழப்பீடு கிடைக்கவில்லை. ஆண்டுதோறும் குவாரியில் உயிரிழப்புகள் தொடர்கின்றன.

ஒவ்வொரு குவாரிகளிலும் சுரங்க மேலாளர், போர்மேன், சுரங்க பணி மேற்பார்வையாளர் மற்றும் வெடி வைப்பவர் ஆகியோர் பணியமர்த்தப்பட வேண்டும். இதனால் வரும்முன் காப்போம் என்னும் அடிப்படையில் உயிரிழப்புகள் தவிர்க்கப்படும். குவாரி உரிமையாளர் உரிமம் பெற்றுள்ளபோது, அதனுடைய வரைபடத்தில் எப்படி உள்ளதோ அதே போன்றுதான் சுரங்க பணியை ஆரம்பிக்க வேண்டும். சுரங்க சட்டம் படித்தவர்களை பணிக்கு அமர்த்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீரப்பகவுண்டனூர் கல் குவாரியில் நடந்த விபத்து குறித்து கனிம வளத்துறை உயர் அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி உயிரிழந்த தொழிலாளிக்கு இழப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

# ஆடி மாதமும் அம்மன் திருவருளும்–30

## நெல்லூர்பேட்டை ஸ்ரீதேவி மாசுபடா அம்மன்



வேலூர் மாவட்டம் குடியாத்தம் கவுண்டன்யா ஆற்றின் கரையோரத்தில் உள்ள நெல்லூர்பேட்டையில் எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார் ஸ்ரீதேவி மாசுபடா அம்மன்.

ஒரு சமயம் பிரம்மஹத்தி தோஷத்தால் பாதிக்கப்பட்ட இந்திரன், மதுரை சொக்கநாதருக்கு பூஜை செய்ய சென்றார். செல்லும் வழியில் நெல்லூர்பேட்டையில் ஸ்ரீதேவி மாசுபடா அம்மன் சிரசுக்கு பூஜை செய்து அந்த தீர்த்தத்தை குடித்ததும் தோஷம் நீக்கி உடல் நலம் பெற்றார். அன்று முதல் இங்குள்ள அம்மன் சிரசுவை பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர் என்று கோயிலின் தல வரலாறு கூறுகிறது. இந்தக் கோயிலில் மூலவர் சிலை இல்லாமல் சிரசு மட்டுமே உள்ளது. கோயிலில் அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்படும் புனித நீர் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது. இந்த அபிஷேக நீரை குடித்தால் அம்மை போன்ற நோய்கள் நீங்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

ஸ்ரீதேவி மாசுபடா அம்மன் கோயிலின் தல விருட்சமாக அரச மரம் உள்ளது.

இங்கு வரும் பக்தர்கள் இநத அம்மனை வழிபட்டு, இந்த அரச மரத்தைச் சுற்றி வந்து, தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றி வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டு ஆடி மாதமும் வெள்ளிக்கிழமைகளில் அம்மனுக்கு பக்தர்கள் தங்களது கைகளாலேயே அபிஷேகம் செய்து வழிபடலாம் என்பது இந்தக் கோயிலின் சிறப்பம்சமாகும். ஆடி வெள்ளியில் அம்மனின் அலங்காரத்தை காண கண்கோடி வேண்டும் என்று இங்கு வரும் பக்தர்கள் சிலாகித்து கூறுவதுண்டு.

gold PRIYAM
REFINED SUNFLOWER OIL
FILTERED GROUNDNUT OIL
COLD PRESSED GINGELLY OIL
SHREE ஸ்ரீ DHIYA OIL
For Enquiries please call : RAMAN TRADERS THIRUVANDARKOIL, PUDUCHERRY. ✆ 98943 00066

தமிழ்நாடு அரசு

**பொதுப்பணித்துறை, கட்டடம் (க & ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 12 கட்டட (க & ப) வட்டம் /2024-2025/நாள். 13.08.2024**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: மொத்த வகை /இரு உறை முறை**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க (ம) ப) வட்டம் சென்னை-5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

| வ.எண் | பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை | பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு |
|---|---|---|---|---|
| 1. | **இரு உறை முறை** சென்னை 600 028, பசுமை வழிச் சாலையில் முக்கியப் பிரமுகர்கள் தங்குவதற்கு ரோஜா (NB-11) க்கு அருகில் உள்ள காலி இடத்தில் 3 பங்களாக்கள் கட்டும் பணி. மு.வை.தொகை:ரூ. 5,21,300 / - | ரூ 1022.49 இலட்சங்கள் | 12 மாதங்கள் | வகுப்பு I மற்றும் அதற்கு மேல் |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்: 18.09.2024 மாலை 03.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 18.09.2024 மாலை 04.00 மணி

**செ.ம.தொ.இ / 2996 / ஒப்பந்தப்புள்ளி /2024**

**கண்காணிப்புப் பொறியாளர்,பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5.**



மும்பையில் நடைபெற்ற 2024 ரீடெய்ல் ஜுவல்லர் இந்தியா விருது வழங்கும் நிகழ்வில் கீர்த்திலால்ஸ் நிறுவனத்தின் வண்ண ரத்தினக்கல் பொருத்திய மோதிரத்துக்கு ஆண்டின் சிறந்த மோதிரம் என்ற கௌரவமிக்க விருது வழங்கப்பட்டது.

## கீர்த்திலால்ஸ் நிறுவனம் உருவாக்கிய ரத்தினக்கல் மோதிரத்துக்கு விருது

● கோவை

கீர்த்திலால்ஸ் நிறுவனம் உருவாக்கிய ரத்தினக்கல் மோதிரத்துக்கு ஆண்டின் சிறந்த மோதிரம் விருது வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவின் முன்னணி வைரம் மற்றும் தங்க ஆபரண பிராண்டாக பல தலைமுறைகளாக புகழ் பெற்று விளங்குகிறது கீர்த்திலால்ஸ் நிறுவனம். மும்பையில் நடைபெற்ற 2024 ரீடெய்ல் ஜுவல்லர் இந்தியா விருது வழங்கும் நிகழ்வின் 19-வது பதிப்பில் கீர்த்திலால்ஸ் நிறுவனத்தின் வண்ண ரத்தினக்கல் பொருத்திய மோதிரத்துக்கு, ஆண்டின் சிறந்த மோதிரம் என்ற கௌரவமிக்க விருது வழங்கப்பட்டுள்ளது. நவீன நுகர்வோரின் டிசைன்களும், தேவைகளும் மாற்றம் கண்டு வரும் நிலையில் ஆபரண வடிவமைப்பில் புது தாக்கத்தை திறம்பட புகுத்துவதில் கீர்த்திலால்ஸ் நிறுவனம் நிபுணத்துவத்தையும், பொறுப்புறுதியையும், இந்த விருது வலுவாக சுட்டிக்காட்டுகிறது. இவ்விருதை பெற்றிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியையும், உத்வேகத்தையும் அளித்திருக்கிறது.

நாங்கள் உருவாக்கும் ஒவ்வோர் ஆபரணத்திலும், நேர்த்தி நிலையை உறுதிசெய்வதில் எமது அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டாக இது திகழ்கிறது. இத்தொழில் துறையில் புதிய போக்குகளை நிறுவும் விதத்தில் ஒவ்வோர் ஆபரணத்திலும், எமது ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு குழுவினரின் திறனுக்கான அங்கீகாரமாக இவ்விருது கிடைத்திருக்கிறது என கீர்த்திலால்ஸ் நிறுவனத்தின் வர்த்தக செயல் யுக்திக்கான இயக்குநர் சூரஜ் சாந்தகுமார் கூறினார். 1939-ம் ஆண்டு நிறுவப்பட்ட இந்நிறுவனம் உலகளவில் முன்னணி வைர ஆபரண பெருநிறுவனமாக தன்னை நிலை நாட்டியுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வியர்க்குதே

மடத்துக்குளம் துணை மின் நிலையத்துக்குட்பட்ட கீழ்வரும் பகுதிகளில் நாளை (ஆக.16) பராமரிப்புப் பணிகள் காரணமாக காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் இருக்காது என மின்வாரியம் அறிவித்துள்ளது.

மடத்துக்குளம், கிருஷ்ணாபுரம், நரசிங்காபுரம், கேடிஎல், பாப்பான்குளம், சோழமாதேவி, வேடப்பட்டி கணியூர், காரத்தொழுவு, கடத்தூர், வஞ்சிபுரம், உடையார்பாளையம், தாமரைபாடி, சீலநாயக்கன்பட்டி, ஜோத்தம்பட்டி, ரெட்டியாபாளையம், செங்கண்டிபுதூர், போத்தநாயக்கனூர், மயிலாபுரம், மடத்தூர், குளத்துப்பாளையம், நல்லூர்.

UJJIVAN SMALL FINANCE BANK

**பதிவு அலுவலகம்:** கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறைவிதிகள்2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை (ரூபாயில்) | டேவணித்தொகை (EMD) (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| **கிளை அலுவலகம்:** எண்.4/128, தரைத்தளம், சுதந்திரபுரம், சிக்கடசாமிபாளையம் கிராமம், மேட்டுப்பாளையம், தமிழ்நாடு-641301 | | | | | |
| 1. | 1188210050000001 **1.Mrs.சத்தியவாணி,** W/o.Mr.முத்துகுமார், **2.Mr.முத்துகுமார்,** S/o.Mr.ராமசாமி கவுண்டர், இருவரது முகவரி: #254/129, காந்தி நகர் 1, தேக்குப்பாளையம் அஞ்சல், பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641020 | **(i) 23.07.2021** 22.07.2021 அன்றுள்ளபடி ரூ.**12,09,254/-** (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 12.12.2022 & நேரடியான சுவாதீனம் 04.11.2023 | **26.07.2024 அன்றுள்ளபடி ரூ.21,09,512/-** (ரூபாய் இருபத்து ஒன்று லட்சத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று பன்னிரண்டு மட்டும்) | **ரூ.6,72,000/-** (ரூபாய் ஆறு லட்சத்து எழுபத்து இரண்டாயிரம் மட்டும்) | **ரூ.67,200/-** (ரூபாய் அறுபத்து ஏழாயிரத்து இருநூறு மட்டும்) |
| **சொத்து விவரம் :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **S.F.எண்.1651/7, (பழைய S.F.எண்.465/2 பகுதி), நத்தம் பட்டா எண்.736, கணபதி கிராமம் என்னும் முகவரியில் பரப்பு 2088 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்** மற்றும் அதனுடன் அனைத்து இதர உபகரணங்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். **கதவு எண்.36/30.35/66,** சொத்து வரி எண்.7423,7424. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் திசையில் 43 அடி, வடக்கு தெற்காக வடக்கின் குறுக்கே 11 அடி, கிழக்கு மேற்காக தெற்கு திசையில் 27.5 அடி, வடக்கு தெற்காக கிழக்கு திசையில் 69.5 அடி, வடக்கு தெற்காக மேற்கு திசையில் 56.4 அடி, மொத்தம் **2088 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்.** எல்லைகள்: நடராஜ்-க்கு சொந்தமான சொத்துக்கு வடக்கு, S.F.எண்.1651/5-ல் உள்ள கிழக்கு மேற்கு பொதுவழிப்பாதைக்கு தெற்கு, சந்திரா-க்கு சொந்தமான வீட்டுக்கு கிழக்கு, குமார் மற்றும் நடராஜ்-க்கு சொந்தமான வீட்டுக்கு மேற்கு. | | | | | |
| **கிளை அலுவலகம்:** எண்.1789-A, சக்ரவர்த்தி டவர், திருச்சி ரோடு, ஒலிம்பஸ், ராமசாமி நகர், புலியகுளம், ராமநாதபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641045 | | | | | |
| 2. | 1186210130000015 **1.Mrs.லட்சுமி,** W/o.சிவசுப்பிரமணியன், **2.Mr.சிவசுப்பிரமணியன்,** S/o.சோமசுந்தரம், **இருவரது முகவரி,** எண்.11B/1, சம்யுக்தா இல்லம், இளங்கோ நகர், ராமசாமி லேஅவுட், ஆவாரம்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641006 | **(i) 19.07.2021** 18.07.2021 அன்றுள்ளபடி ரூ.**27,93,433/-** (ரூபாய் இருபத்தேழு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து நானூற்று முப்பத்து மூன்று மட்டும்) **(ii) சுவாதீனம் 22.09.2022** | **26.07.2024 அன்றுள்ளபடி ரூ.46,00,840/-** (ரூபாய் நாற்பத்து ஆறு லட்சத்து எண்ணூற்று நாற்பது மட்டும்) | **ரூ.27,16,000/-** (ரூபாய் இருபத்து ஏழு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்) | **ரூ.2,71,600/-** (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து ஒன்றாயிரத்து அறுநூறு மட்டும்) |
| **சொத்து விவரம்:** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், தொண்டாமுத்தூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட S.F.எண்.422/1, **வேடப்பட்டி கிராமம்** என்னும் முகவரியில் அளவுகள்: கிழக்கு மேற்காக இருதிசையிலும் 27 அடி, வடக்கு தெற்காக இருதிசையிலும் 36 அடி **ஆகமொத்தம் 972 சதுர அடி நிலம் மற்றும் RCC கட்டிடம், இதில் தரைத்தளம் 932.12 சதுர அடி, முதல் தளம் 738.23 சதுர அடி,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், அதனுடன் மின்சார இணைப்பு மற்றும் தண்ணீர் இணைப்புகள் மற்றும் டெபாசிட் மற்றும் அனைத்து வழிப்பாதை உரிமை மற்றும் அனுமந்த உரிமை, கதவு எண்.21/57D, மதிப்பீடு எண்.2363, SC.No.03-105-010-170 & SC.No.551, அனைத்து இதர உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: 4 அடி கிழக்கு மேற்கு ரோடுக்கு தெற்கு, வடக்கு தெற்கு மெயின் ரோடுக்கு கிழக்கு, மீதமுள்ள சொத்துக்கு மேற்கு, சுப்பிரமணியன் சொத்துக்கு வடக்கு. | | | | | |
| 3. | 1186210090000003 **1.முகமது இப்ராஹிம் ப்ருட்ஸ் மற்றும் வெஜிடெபில்ஸ்** (Mohamed Ibrahim Fruits and Vegetables), **அதன் சார்பாக Mr.முகமது இப்ராஹிம், 2.Mr.முகமது இப்ராஹிம்,** S/o.Mr.அபாஸ் முகமது, **3.Mrs.ஆயிஷா நஸ்தீன்,** W/o.Mr.முகமது இப்ராஹிம், அனைவரது முகவரி: எண்.71, நேரு தெரு, ராம் நகர், கோயம்புத்தூர்- 641009 | **(i) 01.05.2022** 07.04.2022 அன்றுள்ளபடி ரூ.**37,50,310/-** (ரூபாய் முப்பத்தேழு லட்சத்து ஐம்பதாயிரத்து முன்னூற்று பத்து மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 13.12.2022 & நேரடியான சுவாதீனம் 14.03.2024 | **26.07.2024 அன்றுள்ளபடி ரூ.50,05,854/-** (ரூபாய் ஐம்பது லட்சத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) | **ரூ.38,00,000/-** (ரூபாய் முப்பத்து எட்டு லட்சம் மட்டும்) | **ரூ.3,80,000/-** (ரூபாய் மூன்று லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) |
| **சொத்து விவரம்:** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார்பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **T.S.எண்.119, பஜார் தெரு, பொள்ளாச்சி டவுன் வார்டு எண்.6** என்னும் முகவரியில் அளவுகள்: கிழக்கு மேற்காக இருதிசையிலும் 834, வடக்கு தெற்காக இருதிசையிலும் திசையில் 55, பரப்பு **481¼ சதுர அடி காலி நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள 484 சதுர அடி RCC கட்டிடம்** அதனுடன் மின்சார சேவை மற்றும் டெபாசிட்டுகள் மற்றும் அனைத்து இதர வழிப்பாதை உரிமை மற்றும் அனுமந்த உரிமைகள். **கதவு எண்.92/1, T.S.எண்.119,** மதிப்பீடு எண்.8305 மற்றும் இதில் மேற்கு பக்கம் உள்ள பொதுவான பாதி பங்கு, அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு மேற்கு மார்க்கெட் ரோடுக்கு வடக்கு, முகமது ஜாபர் ஷாப்-க்கு மேற்கு, கன்னிகாபரமேஸ்வரி டெம்பிள்-க்கு சொந்தமான ஷாப்-க்கு கிழக்கு, கோபால் சொத்துக்கு தெற்கு. | | | | | |

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 11.09.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை**

| விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: | சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: |
|---|---|
| **10.09.2024** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை | **09.09.2024** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை |

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.நடராஜ்: Mob: 81470 01897, Mr.R.புஷ்பகாந்த்: 98431 14222 & Mr.ராம்: 95009 96689**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob: 74182 81709)** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824, 25, 26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம். i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: **15.08.2024**
இடம்: **பெங்களூரு**

ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

Sakthi Finance Since 1955

**சக்தி பைனான்ஸ் லிமிடெட்**

(CIN : L65910TZ1955PLC000145)

**பதிவு அலுவலகம் :** 62, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர் – 641 018
**போன் :** (0422) 2231471-474, 4236200 **ஃபேக்ஸ் :** (0422) 2231915
**மின்னஞ்சல் :** investors@sakthifinance.com **இணையதளம் :** www.sakthifinance.com

**பங்குதாரர்களின் 67-வது ஆண்டு பொதுப் பேரவைக் கூட்டம் பற்றிய அறிவிப்பு**

கம்பெனியின் பங்குதாரர்களின் 67-வது ஆண்டு பொதுப் பேரவைக் கூட்டம், கம்பெனிகள் சட்டம் 2013, கம்பெனி விவகாரங்கள் அமைச்சகத்தின் **("MCA")** சுற்றறிக்கை எண் 09/2023 25 செப்டம்பர் 2023, உடன் முந்தைய சுற்றறிக்கை எண்கள் முறையே 14/2020 8 **ஏப்ரல்** 2020, 17/2020 13 **ஏப்ரல்** 2020, 20/2020 5 **மே** 2020, 02/2021 13 **ஜனவரி** 2021, 21/2021 14 **டிசம்பர்** 2021, 2/2022 5 **மே** 2022, 10/2022 28 **டிசம்பர்** 2022 **(கம்பெனி விவகாரங்கள் அமைச்சகத்தின் சுற்றறிக்கைகள்)** மற்றும் செபியின் **("SEBI")** சுற்றறிக்கைகள் முறையே SEBI/HO/DDHS/P/CIR/2023/0164 6 அக்டோபர், 2023, SEBI/HO/ CFD/PoD-2/P/CIR/2023/4 5 ஜனவரி, 2023, SEBI/ HO/CFD/ CMD2/CIR/P/2022/62 13 மே 2022, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 15 ஜனவரி 2021 மற்றும் SEBI /HO /CFD /CMD1 /CIR /P/ 2020/79 12 மே 2020 **(செபி சுற்றறிக்கைகள்)** ஆகியவைகளின் படி பங்குதாரர்களின் நேரடி பங்கேற்பு இல்லாமல், காணொளி வழியாகப் பங்கேற்பு **("Video Conference")** அல்லது பிற ஒலியுணர் காட்சி வழிமுறை **("Other Audio Visual Means")** மூலம் **10 செப்டம்பர் 2024-ம் தேதி, செவ்வாய்க்கிழமை, 11.00 மணிக்கு** நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக பங்குதாரர்கள் கீழ்க்கண்டவற்றைக் கவனிக்கவும்.

1. மேற்கூறிய சுற்றறிக்கைகளின்படி, கூட்ட அறிவிப்பு, விளக்கவுரை மற்றும் 2024 ஆண்டறிக்கை ஆகியவை, தங்களது மின்னஞ்சல் முகவரியை **("E-mail ID")** கம்பெனி / பங்குமாற்று ஏஜெண்ட் அல்லது டெபாசிட்டரியிடம் பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு மட்டுமே மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். கூட்டத்திற்கான அறிவிப்பு மற்றும் 2024 ஆண்டறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம், **www.sakthifinance.com** மற்றும் மும்பை பங்குச் சந்தையின் இணையதளம், **www.bseindia.com** ஆகியவற்றில் கொடுக்கப்படும்.
2. இதுவரை தங்களது மின்னஞ்சல் முகவரியை **("E-mail ID")** கம்பெனி / பங்குமாற்று ஏஜெண்ட் அல்லது டெபாசிட்டரியிடம் பதிவு செய்யாத பங்குதாரர்கள், தங்களது மின்னஞ்சல் முகவரி **("E-mail ID")** மற்றும் கைபேசி எண்ணை **("Mobile Phone Number")** கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
   a. பங்குகளை மின்னணு மூலமாக வைத்திருக்கும் பங்குதாரர்கள், தங்களது டெபாசிட்டரியை தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.
   b. பங்குகளை பங்குபத்திர வடிவில் வைத்திருக்கும் பங்குதாரர்கள், தங்களின் பெயர், ∴போலியோ எண், முழு முகவரி, மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண் ஆகிய விபரங்களைக் கொண்ட கையொப்பமிடப்பட்ட கோரிக்கைக் கடிதம், வருமான வரி கணக்கு எண் அட்டையின் நகல் மற்றும் கையொப்பமிடப்பட்ட முகவரிக்கான சான்றிதழ் ஆகியவைகளை கம்பெனியின் **investors@sakthifinance.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

   கூட்ட அறிவிப்பு மற்றும் 2024 ஆண்டறிக்கை ஆகியவை மின்னஞ்சல் மூலம் அனுப்பிய பிறகு கம்பெனியின் பங்குதாரர்களாக ஆனவர்கள், கூட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளபடி தங்களின் யூசர் ஐடி **("User ID")** மற்றும் கடவுச்சொல் **("Password")** ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. கம்பெனியானது பங்குதாரர்கள் தங்கள் ஈவுத்தொகையை அவரவருடைய வங்கிக் கணக்கில் மின்னணு தீர்வு சேவை **("ECS")** அல்லது மற்ற மின்னணு வழிகள் மூலம் வரவு வைப்பதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
4. நிதிச் சட்டம் 2020-ன் படி **("Finance Act 2020"),** நிறுவனமானது 2020-ம் வருடம் ஏப்ரல் மாதம் 01-ம் தேதி முதல், வருமான வரிச் சட்டம் 1961 **("IT Act")** வாயிலாக நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈவுத்தொகையிலிருந்து வரி **("TDS")** பிடித்து மீதமுள்ள தொகையை உறுப்பினர்களுக்கு வழங்கும் பல்வேறு பிரிவுகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களுக்கு ஏற்ப, வரி பிடித்தம் செய்யாமல் இருக்க **("NIL TDS")** / முன்னுரிமை விகிதத்தில் வரி பிடித்தம் **("Preferential TDS")** மற்றும் அதற்கான விவரங்கள் / ஆவணங்களுக்கான நிபந்தனைகளுக்கு, உறுப்பினர்கள் வருமான வரி சட்டம், 67வது பொதுக்குழு கூட்ட அறிவிப்பு **("AGM Notice")** ஆகியவற்றை பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பொதுவாக வரி பிடித்தல் **("TDS")** தேவைகளுக்கு இணங்க, உறுப்பினர்கள் வருமான வரி துறையின் நிரந்தர கணக்கு எண், வரி சட்டத்தின்படியான தங்களின் வகை ஆகிய தகவல்களை:
   a. மின்னணு வடிவில் பங்குகளை வைத்திருப்போர், தங்களது **DP**-யை தொடர்பு கொள்ள வேண்டும்.
   b. பங்குகளை பத்திர வடிவில் வைத்திருப்போர் உரிய தகவல்களுடன் **investors@sakthifinance.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும்.
5. ஆண்டு பொதுப் பேரவைக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள எல்லா தீர்மானங்கள் மீதும் பங்குதாரர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது கூட்டத்தின் பொழுது மின்னணு வாக்களிப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
6. ஆண்டு பொதுப் பேரவைக் கூட்டத்தில் பங்கு பெற்று வாக்குப் பதிவு செய்வதற்கும் மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு செய்வதற்கும் தேவையான விபரங்கள் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்படும்.
7. ஆண்டு பொதுப் பேரவைக் கூட்டம் பற்றிய முழு விபரங்களுக்கு, கூட்ட அறிவிப்பைப் பார்க்கும்படி பங்குதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சக்தி பைனான்ஸ் லிமிடெட்டிற்காக
**சி.சுப்பிரமணியம்**
கம்பெனி செயலாளர் மற்றும் முறைப்படுத்தும் அதிகாரி
FCS6971

14 ஆகஸ்ட் 2024
கோயம்புத்தூர் - 18

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by M. Jegadesh Kumar at Survey Nos. 391/1 Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).